போடுகிறார்கள். அதற்குப்பிறகு காங்கேயத்தில் போடுகிறார்கள். அதாவது, புகளூர் பகுதியில் 4,250 கோடி ரூபாய் செலவில் போடுகின்றார்கள். அதற்கிடையிலே அந்த மின்சாரத்தைப் பிரிக்க முடியாத சூழ்நிலைதான் இப்பொழுது இருக்கிறது. அப்படியே பிரித்தாலும்கூட, 400 கிலோ வாட் அளவிற்கு முழுமையாகக் கேபிள் போட முடியாத சூழ்நிலைதான் தற்போது உள்ளது. எந்த மாநிலத்திலும் இதுபோன்று இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் போராட்டத்தைத் தூண்டினார்கள் என்று இவர்களைச் சொல்லவில்லை.

4. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 6-வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கின்றேன்:

1. திரு. பி.எம். நரசிம்மன்
2. திரு. எஸ்.பி. சண்முகநாதன்
3. திரு. சு. ரவி
4. திரு. இரா. குமரகுரு
5. திரு. சு. குணசேகரன்
6. திரு. வி.வி. இராஜன் செல்லப்பா